# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/Estt./2020/669** **Date: 06.09.2020**

## அலுவலக செய்திகுறிப்பு

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் அனைத்து பணியாளர்களும் 100 சதவிகித பணியாளர்களுடன் கட்டாயமாக (Compulsory) பணிபுரிவது – தொடர்பாக.

**பார்வை:** 1. அரசாணை (MS) எண்.239, Revenue and Disaster Management (DM-II) துறை, நாள் 15.05.2020
2. தமிழக அரசு செய்திக் குறிப்பு எண்.451 நாள் 29.06.2020
3. தமிழக அரசு செய்திக் குறிப்பு எண்.113, நாள் 04.07.2020
4. தமிழக அரசு செய்திக் குறிப்பு எண்.491, நாள் 12.07.2020
5. தமிழக அரசு செய்திக் குறிப்பு எண்.182, நாள் 30.08.2020

-----

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செய்தி குறிப்புகளில் கோவிட்-19 காரணமாக 31.08.2020 வரை முழு ஊரடங்கு முறையினை கடைபிடிக்குமாறும், இந்த முழு ஊரடங்கு 30.09.2020 வரை சில நிபந்தனைகளுடன் கூடிய தளர்வுகளுடன் கடைபிடிக்குமாறும் அறிவிக்கப்பட்டது.

தமிழக அரசின் அறிவிப்பில் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள் 50 சதவிகித பணியாளர்களுடன் வாரத்தின் பணி நாட்களில் (அதாவது திங்கள் முதல் சனி வரை) இரு பிரிவுகளாக பிரித்து பணிபுரிய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

பார்வை 5-ல் காணும் தமிழக அரசின் செய்திக் குறிப்பில் தற்போது 50 சதவிகித பணியாளர்களுடன் இயங்கும் அரசு அலுவலகங்கள் 01.09.2020 முதல் 100 சதவிகித பணியாளர்களுடன் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் 100 சதவிகித பணியாளர்களுடன் 07.09.2020 முதல் பணிபுரிய கட்டாயமாக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனை பின்பற்றாமல் இருக்கும் பணியாளர்களின் மீது பல்கலைக்கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டு கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பதிவாளர்

பெறுநர்

1. அனைத்து துறைத்தலைவர்கள்
2. தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி
3. நிதி அலுவலர்
4. அனைத்து இணைப்பேராசிரியர்கள் மற்றும் உதவிப்பேராசிரியர்கள்
5. அனைத்து துணைப்பதிவாளர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள்